**தலாவ பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 13 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கான போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு அத்தாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியவில்லை.

### 1.3 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2015 ஏப்ரல் 20 ஆம் திகதி சபை நிதியின் மூலம் கொள்வனவு டிசய்யப்பட்ட ரூபா. 744,000 பெறுமதியான குளிரூட்டி இயந்திரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கணக்குகளிலிருந்து அது நீக்கப்பட்டிருக்கவில்லை. | குணக்குகளிலிருந்து வேறாக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானமாகிய ரூபா. 3,939,900 நிதிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | குறித்த வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (iii) | மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன்களுக்கான வட்டி செலவு ரூபா 212,049 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வட்டிச் செலவு சரியாகக் கணக்கிடப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி சபையின் 03 | சரியாகக் கணக்கிடப்படல் | புதில் அளிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைக் கணக்குகளில் இனங்காணப்படாத வைப்புகள் ரூபா 2,927,860 இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (v) | 2019 ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்படவிருந்த செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 50,000 பெறுமதியான மோட்டார் கிரேடர் வாடகைப் பெறுவனவு மீளாய்வாண்டிற்குரிய வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாகக் கணக்கிடப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (vi) | கணக்கீட்டு நியமங்களுக்கு முறனாக ரூபா. 310,312 பெறுமதியான 02 வருமான விடயங்கள் ரூபா. 174,066 பெறுமதியான செலவு விடயத்திற்கு ஈடு செய்து வித்தியாசமாகிய ரூபா. 136,246 வேறு வருமானங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வருமானம் மற்றும் செலவுகளை தெளிவாகக் காட்டுவதற்காக நடவடிக்கை எடுப்பதோடு அவ்வாறான ஈடு செய்தல் செய்யக் கூடாது. | புதில் அளிக்கப்படவில்லை |
| (vii) | வட கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் மூலம் (நேடுளுஜீ) நிர்மாணிக்கப்பட்ட தலாவ பொது வியாபாரக் கட்டடத் தொகுதியின் மொத்தப் பெறுமதி ரூபா. 31,620,454 ஆகவிருக்க வேண்டிய போதும் அக் காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா. 19,250,868 என கணக்கிடப்பட்டிருந்தது. | குறித்த சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (viii) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடங்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட ரூபா. 1,979,927 பெறுமதியான 02 அபிவிருத்தித் திட்டங்களின் பெறுமதி மூலதனமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த சொத்துக்கள் மூலதனமயப்படுத்தப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (ix) | பெறுமதி இனங்காணப்படாத அரிசி அரைக்கும் இயந்திரமொன்று, 02 புல் வெட்டும் இயந்திரங்கள் மற்றும் பால் நிலையமொன்றின் உபகரணத் தொகுதியொன்று ஆகியன இனங்காணப்பட்டு | குறித்த சொத்துக்களை முறையாக மதிப்பீடு செய்து பெறுமதிகளை இனங்கண்டு கணக்கிடப்படுவத | புதில் அளிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | ற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |
| (x) | 2018 ஆம் ஆண்டுடன் தொடர்பான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆனைத்துச் செலவினங்களும் கணக்கிடப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (xi) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கையின் மேலதிகம் ரூபா. 8,889,725 ஆகவிருந்த போதும் வருடத்தின் உண்மையான மேலதிகள் ரூபா. 10,516,418 ஆகவிருந்ததன் காரணமாக ரூபா. 1,626,693 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளின் மூலம் வருடத்திற்கான நிதி நிலைமைகள், நிதி விளைவுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

**(ஆ) தெங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 1,103,934 ஆகவிருந்த உறுதியற்ற கணக்கின் மீதி தொடர்பாக ஆராய்ந்து கணக்குகளில் தேவையான இணக்கங்களைச் செய்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வித்தியாசங்கள் தீர்த்து வைக்கப்படுவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி கணக்குகளில் நிலுவையாகக் காப்பட்ட வாடகை பெறுமதி மீதி 04 இன் | குறித்த வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்பட்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | புதில் அளிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா. 2,136,970 நிதிக்கூற்றுக்களில் ரூபா. 934,795 எனக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா. 1,201,175 வித்தியாசம் காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றில் மொத்தச் சொத்துக்கள் ரூபா. 266,359,881 ஆகவிருந்த போதும் மொத்த சொத்துக்களும் பொறுப்புக்களும் ரூபா. 273,227,354 ஆகக் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா. 6,867,473 வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசங்கள் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (இ) | 05 கணக்கு விடயங்களுடன் தொடர்பான கணக்கு மீதி மற்றும் பேரேட்டு மீதிகளுக்கிடையில் ரூபா. 7,731,919 வித்தியாசம் காணப்பட்டது. விபரம் வருமாறு. | குறித்த வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்பட்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | புதில் அளிக்கப்படவில்லை |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல வருடங்களாக இருந்து வருகின்ற ரூபா. 36,026 பெறுமதியான 17 பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கான | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

நடவடிக்கை
எடுக்கப்படவில்லை.

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா. 234,274,798 ஆகவிருந்த 17 கணக்கு விடயங்களுடன் தொடர்பான உரிமைச் சான்றிதழ்கள், சொத்து அறிக்கைகள், மதிப்பீட்டுக் குழு அறிக்கை, தொகை ஆவணங்கள் மற்றும் விபரப் பேரேடு ஆகியன சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை மகிழ்ச்சிகரமாக உண்மைப்படுத்த முடியாது போனது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளை உறுதி செய்வதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இல. 09 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் | முன்னைய வருடங்களில் மற்றும் மீளாய்வு வருடத்தில் அறவிடப்பட்ட மொத்தம் ரூபா. 423,779 ஆகிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (ஆ) | 2006 இல.12 முத்திரைக் கட்டண விசேட விதிமுறைச் சட்டம் | முத்திரைக் வரி ரூபா. 206,995 உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

ல

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2045 ஆம் இலக்க 2011 நவம்பர் 10 திகதிய வர்த்தமாணி அறிவித்தல் | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் சபைக்குச் சொந்தமான பாதைகளில் மண் போக்குவரத்துக்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,224,306 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,371,569 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றில் திருத்தப்பட்ட நிதிப் புத்தகத்திற்கமைவாக ரூபா. 11,336,844 ஆகிய மீதி காட்டப்படுவதற்குப் பதிலாக ரூபா. 8,540,034 ஆகிய திருத்தத்திற்கு முன்னரான நிதிப் புத்தக மீதி காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்று சமர்ப்பிக்கையில் அப் படிவங்களில் சரியான தகவல்கள் உள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுடன் கவனயீனமான தகவல்கள் முன்வைக்கப்படுவதல் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 13,186,113 | 6,343,113 | 6,181,033 | 15,515,764 | 2,080,444 | 6,119,636 | 4,981,307 | 15,503,033 |
| (ii) | நீதிமன்றத் தண்டப்பணம் | 6,930,000 | 5,700,000 | 9,500,000 | 12,611,712 | 7,801,067 | 6,500,000 | 6,000,000 | 10,378,207 |
| (iii) | முத்திரைக் கட்டணங்கள் | | 3,000,000 | - | 6,664,130 | - | 2,000,000 | - | 3,502,840 |
| (iv) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,678,000 | 401,000 | 392,595 | - | 518,350 | 472,500 | 604,090 | - |
| | வியாபார வரி | | 3,414,000 | 4,763,510 | - | 4,789,774 | 3,200,000 | 5,242,174 | - |
| | வாடகை | 18,456,253 | 2,838,640 | 1,522,395 | 308,740 | 1,204,560 | 1,182,640 | 1,381,035 | 583,280 |
| | விலைமனு | 4,213,613 | 4,213,613 | 2,931,637 | 443,828 | 4,138,100 | 4,138,100 | 2,012,029 | 483,118 |
| | மொத்தம் | 45,463,979 | 25,910,366 | 25,291,170 | 35,544,173 | 20,532,295 | 23,612,876 | 20,220,635 | 30,450,478 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை வருமானம் மற்றும் வருடத்தின் சிட்டைப் படுத்தப்பட்ட வருமானத்திலிருந்து 45வீதமாகிய ரூபா. 25,291,170 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

### 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிட்டைப்படுத்தப்பட்ட வாடகை வருமானம் ரூபா. 2,836,640 இல் 34 வீதமாகிய ரூபா. 958,685 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | வாடகை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (ஆ) | மீளாய்வாண்டில் சிட்டைப்படுத்தப்பட்ட விலைமனு வருமானம் ரூபா. 4,213,613 இல் 66 வீதமாகிய ரூபா. 2,791,199 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் முழுப் பெறுமதியையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் | புதில் அளிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| | வேண்டும்.ஒப்பந்தத்தினை மீறுபவர்களுக்கெதிராக விலைமனு விதிமுறைகளுக்கமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**2.3.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா. 12,611,712 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 12,426,660 அறவிடப்பட்டிருக்க வில்லை. | குறித்த தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த விடயங்கள் தொடர்பில் உப விதிகள் விதிக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தத் செயல் நடவடிக்கைத | புதில் அளிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| | தயாரிக்கப்படல் வேண்டும். | |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நரல் தொடர்பில் சபை அறிந்து வைத்திருக்கவில்லை. | இலக்குகள் குறிக்கப்பட்டு அவற்றை அடைவதற்கான முயற்சி எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை வாடகை உரிமையாளர்கள் காரியாலயத்திற்கு வந்து செலுத்திய கட்டணங்களை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு கொடுப்பனவாக 15 உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 101,097 செலுத்தப்பட்டிருந்தது. | காரியாலயத்திற்கு வந்து செலுத்திய கட்டணங்களுக்காக ஊக்கக் கொடுப்பனவு செலுத்த முடியாது. | புதில் அளிக்கப்படவில்லை |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த ரூபா. 39,686,310 பெறுமதியான 5 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | குறித்த வாகனங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும | புதில் அளிக்கப்படவில்லை |
| (இ) | 2018 ஜனவரி முதல் ஜுலை வரையிலான காலப்பகுதியினுள் 20 சிட்டைப் புத்தகங்கள் காணாமல் போயிருந்தன | காணாமல் போயிருந்த சிட்டைப் புத்தகங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 பெப்ரவரி 06 ஆம் திகதி முதல் ஜுலை 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் பொதுக் கணக்கு தொடர்பாக வருமான விடயங்களினால் விடுவிக்கப்பட்ட 37 சிட்டைகளின் மூலம் பெறப்பட்ட ரூபா. 222,276 வங்கியில் இடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரிவுகளின் பிரகாரம் செயற்பட்டு தாபனக் கோவை விதிமுறை பொறுப்புக் கூற வேண்டிய பகுதியினர் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (உ) | 2018 மார்ச் 07 ஆம் திகதி முதல் மார்ச் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் இயந்திரங்களை சேவைக்கு விடுவதன் மூலம் 10 சிட்டைகளின் மூலம் பெறப்பட்ட ரூபா. 83,200 வங்கியில் இடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரிவுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான LL 6932 இலக்க டிபர் வாகனம் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி ஏற்பட்ட சேதம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் வரை திருத்தியமைக்கப் பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சேதங்களுக்கான அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (எ) | தலாவ நகரத்தில் பொது வியாபாரக் கட்டடத் தொகுதி நிர்மாண வேலைகள் முடிவடைந்து 2017 மார்ச் மாதம் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வாடகைக்கு வழங்கு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பொது வியாபாரக் கட்டடத் தொகுதியினை வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் திரட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

### 3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா. 814,000 பெறுமதியான அரிசி மாவு உற்பத்தி இயந்திரத் தொகுதியொன்று எழுத்து மூல ஒப்பந்தம் அல்லது சபையின் அனுமதியின்றி மூன்றாவது தரப்பிற்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின் விசாரணை செய்து அதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | குறித்த சொத்துக்களை இனங்கண்டு எழுத்து மூல ஒப்பந்தத்தின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கும் அதன் மூலம் வருமானம் ஈட்டவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |
| (ஆ) கிராமியப் பிரதேசங்களில் 100 கி.மீ. அபிவிருத்தி செய்யும் 2017 திட்டத்தின் கீழ் ரூபா. 29,206,846 பெறுமதியான 03 திட்டங்கள் தொடர்பான பாதீட்டைத் தயாரிக்கும் பொழுது சபை செயற்றிறனின்றி செயற் பட்டமை காரணமாக பாதீடு அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. அதே போன்று இத் திட்டங்களுக்காக விலைமனுக் கோரல் விளம்பரம் பிரசுரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 156,915 பலனற்றுப் போயிருந்தது. | விளம்பரம் பிரசுரிப்பதற்கான நட்டத்தினை பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

### 3.4 பயன்பாடற்ற / குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா. 15,982,671 பெறுமதியான 12 நிலையான சொத்துக் கூறுகள் | 1997 செப்டம்பர் 30 ஆம் திகதிய 353 ஆம் இலக்க, 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க, | புதில் அளிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாடற்றுக் காணப்பட்டன. | மற்றும் 2003 ஜனவரி 03 ஆம் திகதிய 353(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமாணம் 771 இன் பிரகாரம் செயற்படல் வேண்டும். | |
| (ஆ) | அரிசி அரைக்கும் இயந்திரமொன்று மற்றும் பால் நலையமொன்றின் உபகரணங்கள் பாவனைக்கு உட்படுத்தப்படாது சபை வளாகத்தினுள் கரை படிந்து காணப்பட்டன. | குறித்த சொத்துக்கள் தொடர்பாக ஆய்வொன்றினை மேற்கொண்டு சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதில் அளிக்கப்படவில்லை |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) நிதி அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தினூடாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கமைய 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் செயற்படல் வேண்டும் | புதில் அளிக்கப்படவில்லை |